# “பாட்டுடைத் தலைவருக்கு காட்டூரில் கலைக்கோட்டம்!”



ஏட்டூரில் கவியெழுதி
எழுத்தூரில் புகழெழுதிப்
பாட்டூரில் சுவையெழுதிப்
பண்டிதராய் வாழ்ந்தவர்க்கு -

காட்டூரில் திறக்கின்ற
கலைக்கோட்டம் நமதுதமிழ்
நாட்டூரின் வரலாற்றில்
நங்கூரம் போல்நிற்கும்!

மேட்டூரில் நீர்திறந்து
மேன்மைக்கு வழிசெய்து
காட்டூரில் இன்றைக்குக்
கவிதைக்கோர் எழில்செய்து-

தேனூரில் பிறந்தாற்போல்
தித்தித்த கலைஞர்க்கு
வானூரில் தோன்றுகிற
வண்ணத்தில் முறைசெய்து-

தளபதியார் நடத்துகிற
தங்கமய மானவிழா-
பலபதியார் மனம்போற்றிப்
பரவுகிற ஞானவிழா!

ஆரூரில் உறவாடி
அரியதமிழ்ச் சீர்பாடி
தேரூரில் இருந்தபடி
திசையெல்லாம் விளையாடி

ஏரூரும் வளநாட்டின்
இசையூறும் மொழியழகை
ஊரூராய் உரைத்தபடி
உலாவந்த கலைஞர்க்கு-

தலைக்கோட்டம் எனுமாறு
தமிழ்க்கோட்டம் தான்கண்ட
மலைக்கோட்டை நிகர்த்திட்ட
மாமனிதர் தளபதிக்கு-

பொதியம்போல் இமயம்போல்
புகழ்பூத்துப் பொலியட்டும்!
மதியம்போல் கதிரும்போல்
மாண்பொளிகள் வீசட்டும்!

சிற்றூரில் பிறந்தாலும்
திருவாரூர் வளர்ந்தாலும்
மற்றூர்கள் எங்கெங்கும்
மையங்கொண் டிருந்தபுயல்-

நாவூறி வருகின்ற
நற்றமிழால் இளையோரை
வாவென்று கூப்பிட்டு
வசமாக்கி வைத்தசெயல்-

இன்றுவரை வியப்புத்தான்!
எல்லோர்க்கும்மலைப்புத்தான்!
என்றுவரை ஆகாயம்
அன்றுவரை திகைப்புத்தான்!

ஈரோடும் காஞ்சியும்
எழுச்சிக்குத் தலைநகராய்
வீறோடும் சீரோடும்
விளங்கிவந்த வேளைகளை-

கால்சட்டைப் பருவத்துக்
காளைக்கு வாய்த்திட்ட
மேல்சட்டை, கொடியென்று
மின்னிவந்த பொழுதுகளை-

பூப்பிடிக்கும் பருவத்தில்
பூகம்ப உருவத்தில்
தீப்பிடிக்க நின்றவரின்
தினவெடுத்த கனவுகளை-

இப்போது நினைத்தாலும்
எரிகொள்ளி யாய்நெஞ்சம்
தப்பாமல் எரிகிறது!
தமிழ்மானம் புரிகிறது!

திரைக்குள்ளும்உரைக்குள்ளும்
திராவிடத்துப் போர்வாளை
விரைவாக எடுத்தெடுத்து
வீசியவர் நம்கலைஞர்!

அண்ணாவை வார்த்தைகளில்
அழகாக ஒளித்துவைத்துப்
பண்ணார்ந்த திரையுலகில்
பரப்புரைகள் பலசெய்தார்!

ஐயாவின் கொள்கைகளை
அணுவைப் பிளந்ததுபோல்
நையாண்டிச் சொற்பெய்து
நரம்பெல்லாம் ஏற்றிவிட்டார்!

சொல்லுக்குள் இப்படியா
சுகமிருக்கும் எனுமாறு
கள்ளுக்குள் நீராட்டிக்
கவிதைகளாய்க் கொட்டிவைத்தார்!

கடிதங்கள் எனும்பேரில்
காகிதமே ஆயுதமாய்
வடிவெடுத்து வரச்செய்து
வான்வரைக்கும்கொடிநட்டார்!
அரசியலின் அடிதொட்டு
ஆச்சரிய முடிதொட்டு
சிரசியலே காணாத
சிகரங்கள் பலதொட்டு

கம்பீர மாய்வாழ்ந்த
கலைஞர்க்குப் புதுக்கோட்டம்
நம்வீரத் தளபதியார்
நயப்புறவே அமைத்திட்டார்!

விந்தியத்தைத் தாண்டியிவர்
வித்தகத்தைப் பார்ப்பவர்கள்
‘இந்தியத்தின் இறும்பூது
இவரென்றே’ புகழ்கின்றார்!

நூற்றாண்டு அரசியலின்
நுட்பங்கள் தேர்ந்தவரைப்
போற்றும்நம் தளபதியைப்
போற்றட்டும் பூவுலகம்!

புன்னைமரத் தோப்பாக
புத்துலகக் காப்பாக
தென்னகத்தின் தீர்ப்பாகத்
திகழட்டும் தளபதியார்!

வையத்தின் சுவடாக
வரலாற்றின் சரடாக
ஐயன்நம் வள்ளுவரின்
அறவார்த்தைச் சுடராக

கலைஞரவர் கோட்டம்தான்
காலமெல்லாம் நிற்கட்டும்!
கலைஞரெனும் பாடத்தைக்
காலங்கள் கற்கட்டும்!



**டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
மேனாள் ஒன்றிய இணையமைச்சர்

## ஆளுநர் ரவியை அகற்றக்கோரி ம.தி.மு.க. கையெழுத்து இயக்கம்!

### தமிழ்நாடு முழுவதும் இன்று தொடங்குகிறது!

சென்னை, ஜூன்.19-

மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் 29 ஆவது பொதுக் குழுவில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், தமிழ்நாடு ஆளுநர் பொறுப்பிலிருந்து ஆர்.என்.ரவி அவர்களை அகற்றக் கோரும் கையெழுத்து இயக்கத்தை மறுமலர்ச்சி தி.மு.க. இன்று (20.06.2023) காலை 11 மணிக்கு தமிழ்நாடு முழுவதும் தொடங்கி நடத்துகிறது.

தலைநகர் சென்னையில், தலைமைக் கழகம் அமைந்துள்ள தாயகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கழகப் பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் கலந்துகொண்டு கையெழுத்து இயக்கத்தைத் துவக்கி வைக்கிறார்.

கழக அவைத் தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் கோவையிலும், கழகப் பொருளாளர் மு.செந்திலதிபன் கடலூரிலும், கழக முதன்மைச் செயலாளர் துரை வைகோ தென் சென்னையிலும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா காஞ்சிபுரத்திலும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.கு.மணி விழுப்புரத்திலும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் தி.மு. இராசேந்திரன் திருநெல்வேலியிலும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆடுதுறை முருகன் குடந்தையிலும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் டாக்டர் ரொஹையா சேக்முகமது திருச்சியிலும் கையெழுத்து இயக்கத்தைத் துவக்கி வைக்கிறார்கள்.

கழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டக் கழக செயலாளர்கள் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி, மக்கள் இயக்கமாக நடத்துகிறார்கள்.

### சென்னை உட்பட

## 13 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூன் 20-

சென்னை உட்பட 13 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக் கடல் பகுதிகளில் ஒரு மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, வடதமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு திருவள்ளூர், இராணிப் பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இன்று (20.06.2023) வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். செங்கல்பட்டு, காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி யில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

21.06.2023 முதல் 23.06.2023 வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. மேலும் அடுத்த 3 மணி நேரத்திற்கு சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய 9 மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு உள்ளது.

## தூர்வாரும் பணிகள்: முதல்வர் பார்வையிட்டார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

ஓடம்போக்கியாறு திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் சுமார் 29,835 ஏக்கர் நிலங்களுக்கு பாசனமளிக்கிறது.

ஓடம்போக்கியாறு அம்மையப்பன், விளமல், தன்டலை, விஜய புரம், கள்ளிக்குடி, காணூர், நீலப்பாடி, கீவளூர், சிக்கல், நரியங்குடி ஆகிய ஊர்களின் வழியே சென்று இறுதியில் கடுவையாற்றில் கலந்து பின் கடலில் கலக்கிறது.

ஓடம்போக்கியாற்றில் 126.100 முதல் 129.800 கிலோ மீட்டர் வரை ஆகாயத்தாமரைகள் படர்ந்துள்ளது. இதனால் பாசனத்திற்கு முறையாக தண்ணீர் செல்ல இயலாத நிலையும், மழைக் காலங்களில் வெள்ளநீர் தங்கு தடையின்றி செல்ல இயலாத நிலையும் உள்ளது. எனவே, இதனை அகற்றிட வேண்டி விவசாயிகள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் ஓடம்போக்கியாற்றில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆகாயத்தாமரைகளை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த ஆய்வின்போது, கழகப் பொருளாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா,

தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பூண்டி கலைவாணன், சாக்கோட்டை க.அன்பழகன், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சாருஸ்ரீ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மிகவும் பழமை வாய்ந்த இராயபுரம்

## ரயில்வே அச்சுக்கூடத்தை மூடும் திட்டத்தைக் கைவிடுக!

### ஒன்றிய ரயில்வே அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!



சென்னை, ஜூன் 20-

“இராயபுரம் இரயில்வே அச்சுக்கூடத்தை மூடும் முடிவைக் கைவிடுக” என வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

தென்னக இரயில்வே ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வி. ஹரிலால்., இரயில்வே ஊழியர்களின் சார்பாக என்னிடம் வழங்கிய மனுவின் காரணத்தைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

இரயில்வே போர்ட் சென்னை இராயபுரத்தில் உள்ள இரயில்வே அச்சுக்கூடம் உள்ளிட்ட 5 அச்சகங்களை மூடுவதற்கு முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இராயபுரம் இரயில்வே அச்சுக்கூடம் 1890 ஆம் ஆண்டில் துவங்கப் பட்ட மிகவும் பழமையான அச்சுக்கூடம் என்றும், கால ஓட்டத்திற்கு ஏற்ப அது நவீன மயமாக்கப்பட்டு தற்போது டிடிபி(DTP) டெக்னாலஜி மூலம் அச்சுக் கோர்க்கும் திறன் பெற்றுள்ளது என்றும், மேலும் 2015 ஆம் ஆண்டு ரூபாய் 15 கோடி மதிப்பில் ஸ்பெயின் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரொட்டேடக் (ROTATEK) என்னும் இயந்திரத்தின் மூலம் சிறப்பாக இயங்கி வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த அச்சுக்கூடம், இரயில்வேக்கு தேவையான, பதிவு செய்யப்பட்ட இரயில்வே டிக்கெட்டுகள், பதிவு செய்யப்படாத பயணிகள் இரயில் டிக்கெட்டுகள் மற்றும் இரயில்வே கால அட்டவணைகள், இரயில்வே அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான நோட்டு புத்தகங்கள் முதலியவற்றை அச்சிட்டு வழங்கி வருகிறது. இந்நிலையில், இந்த அச்சுக்கூடம் மூடப்பட்டால், அதில் பயன்பாட்டில் உள்ள நவீனக் கருவிகளும், மற்ற உபகரணங்களும், பழைய சாமான்கள் போல மிகக் குறைந்த விலைக்கு விற்கப் பட வேண்டிய நிலை ஏற்படும். இரயில்வேயின் விலை மதிப்பு மிக்க சொத்துக்கள் இழக்க வேண்டி இருக்கும்.


அதுவன்றி, இந்த அச்சுக் கூடம் செய்துவரும், பணிகளைத் தனியார் நிறுவனங்கள் மூலம் செய்ய முனைந்தால், பல கோடி ரூபாய் அளவில் இரயில்வேயின் பணம் விரயமாகும். இந்த தனியாரிடமிருந்து இரயில்வே துறைக்கு தேவையான இரயில்வே டிக்கெட் முதலான பொருட்களை வாங்கும் போது, பல முறைகேடுகள் நடப்பதற்கும் வாய்ப்புகள் உண்டாகும். இந்த அச்சுக் கூடத்தில் பணியாற்றும் தொழில் திறன் பெற்ற தொழிலாளர்கள், வேறு சாதாரண பணியிடங்களில் பணியமர்த்தப்பட வேண்டிய நிலை ஏற்படும். எனவே, இக்காரணங்களால் இந்த அச்சுக்கூடத்தை மூடும் முடிவைக் கைவிடும்படி தங்களிடம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி கடிதத்தில் கூறியுள்ளார்.

### நீலகிரி மாவட்டத்தில், நகர ஒன்றிய பேரூர் கழக

## இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!



நீலகிரி, ஜூன் 20-

நீலகிரி மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க, நீலகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட நகர, ஒன்றிய,பேரூர் கழக அமைப்புகளுக்கு இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இவர்களுக்கான விண்ணப்பங்களை இன்று (20.6.2023) காலை 10 மணி முதல் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதனை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழக இளைஞர் அணியில் இணைந்து பணியாற்ற விருப்பமுள்ள இளைஞர்கள் அனைவரும் விண்ணப்பத்தை பெற்று, பூர்த்தி செய்து மாவட்டக் கழக அலுவலகத்தில் எதிர்வரும் 30.6.2023 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குள் ஒப்படைக்க அனைவரையும் வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.